www.tamilarangam.net




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

இலங்கையில் இருந்து இந்தியப் படையினரை படிப்படியாக வெளியேற்றும் பணிகள் நடந்து கொண்டிருந்தன.

இக்கட்டத்தில் இந்தியப்படை அதிகாரிகள் சிலருடன் பழகி, அவர்களது மனநிலைகளை கட்டுரையாக எழுதியிருந்தார் இந்திரானில் மனோர்ஜி.

அவரது கட்டுரை அன்றைய வன்னி யுத்தத்தின் தன்மையையும் விளக்குவதாக அமைந்துள்ளன. அக் கட்டுரையில் முக்கிய பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

"ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைகள் வெளியேறியபோது நிகழ்ந்த ஆரவாரங்களோ, வியட்நாமிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேறிய போது அமெரிக்க மக்கள் வெளிப்படுத்திய குதூகலமோ இல்லாமல் இந்தியா தனது படைகளை வாபஸ் பெறத் தொடங்கியுள்ளது.

## தாகத்தில் தவித்த படையினர்

கடந்த மாதம் எட்டாயிரம் துருப்புக்களை இந்தியாவுக்கு திருப்பி அழைத்துள்ளதாகவும், இன்னும் சில மாதங்களில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட துருப்புக்கள் வாபஸ் பெறப்படும் என்றும் இவ்வருட (1989) முடிவில் ஒரு சிறு படை மட்டுமே இங்கு அடையாளமாக நிலை கொண்டிருக்கும்.

அண்மையில் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு திரும்பிய இராணுவத் தளபதி ஒருவர் பின்வருமாறு கூறினார்.

"நாங்கள் இன்று இலங்கை அரசாங்கத்தாலும் வேண்டப்படாதவர்கள், அங்குள்ள பெரும்பான்மை மக்களும் எங்களை வெறுக்கிறார்கள். அத்தோடு நம் நாட்டவரே நாங்கள் இலங்கையில் இருப்பதை விரும்பவில்லை.

இவ்வாறு அவர் கூறியதற்கு காரணம் என்ன? இன்று இலங்கையில் சிக்கல் மிக்க அரசியல் சூழ்நிலை காணப்படுகிறது.

### தளபதி கருத்து

இலங்கையில் அமைதிப் படைக்கு தலைமை தாங்கும் தளபதி கல்கட் பி.ரி.ஐ. நிறுவனத்திற்கு பேட்டி அளித்தபோது, "இலங்கைக்கு அனுப்பப்பட்ட அமைதிப் படையின் இராணுவரீதியான நடவடிக்கை முடிந்துவிட்டது. ஆனால் இலங்கைத் தமிழரின் பிரச்சனை அரசியல், இராணுவம் சம்பந்தப்பட்டது.

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை வெளியேறுவது என்பது கூட இலங்கை, இந்திய உயர்மட்ட அரசியல் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது" என்றார்.

இராணுவரீதியாக பல இழப்புகள் இந்தியப் படைகளுக்கு நேர்ந்துள்ளது. ஆயினும் அவர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை அச்சமின்றி நிறைவேற்றி வருகின்றனர். அவர்களுடைய வீரம் உயர்ந்த கட்டுப்பாடுடையதாக உள்ளது" என்றும் அவர் கூறினார்.

ஆனால், அமெரிக்க படைகளுக்கு வியட்நாமில் நேர்ந்ததோ, சோவியத் படைகளுக்கு ஆப்கானிஸ்தானில் நேர்ந்ததோ இந்தியப் படைகளுக்கு நேரக்கூடாது.

அதற்குரிய ஒரே வழி காடுகளில் மறைந்துள்ள புலிகள் இயக்கத்தினர் மேலும் தலையெடுக்க முடியாதபடி அமைதிப்படையினர் தமது முழுப்பலத்தையும் ஒன்று குவித்து, அவர்களைத் தாக்கி அழிக்க வேண்டும்.

ஆனால் இது சாத்தியமா? என்பதே அடுத்த கேள்வி.

இந்தியாவில் உள்ள மிசோராம், மணிப்பூர், நாகலாந்து, திரிபுரா போன்ற இடங்களில் இந்தியப் படை எதிர்கொண்ட அனுபவங்களில் இருந்து இது சாத்தியப்படாது என்றே தெரிகிறது.

காரணம், மக்கள் ஆதரவுள்ள ஒரு கெரில்லாப் போராட்ட இயக்கத்தை தோற்கடிப்பது என்பது கஷ்டமே.

ஆனால் இந்தியப் படை அனுபவிக்கும் துன்பம், அமெரிக்கப்படைகள் வியட்நாமில் அனுபவிக்கும் கஷ்டங்களையோ, சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானில் எதிர்கொண்ட இடர்களையோவிட குறைவானதே என்றாலும், இலங்கையில் அவர்களது நிலை குரூரமானதும், தனிமைப் பட்டதாகவும் இருக்கிறது.

இன்று அநேகமாக வன்னிக் காடுகளிலேயே சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தக் காடுகளில் நிலவும் உஷ்ணமும், அதைச் சுமந்துவரும் காற்றும் ஒவ்வொரு இராணுவ வீரனையும் தாகவிடாயால் தவிக்க வைக்கிறது.

எதிரியின் தாக்குதலைவிட தண்ணீர் தாகமே மிகக் கொடியதாய் உள்ளது. எல்லாத் தண்ணீர் குழிகளும் வரண்டிருப்பதே இதற்கு காரணம்.

இந்த நிலையில் தண்ணீருக்கு அலையும் போது கெரில்லாவால் இவர்களே முதலில் தாக்கப்படுகின்றனர்.

### கண்ணி வெடிகள்

இந்திய இராணுவத்தினருக்கு அதிகமான அழிவுகள் கண்ணிவெடிகளாலேயே ஏற்படுகின்றன.

கண்ணிவெடிகளால் அங்கங்களை இழக்கும் இராணுவவீரர்கள் பலவித மனச் சிக்கலுக்கு உள்ளாகின்றனர்.

கூர்க்கா பிரிவைச் சேர்ந்த சுரேந்திர கேசர்ராய்க்கு இருபது வயது. தேடுதல் வேட்டை ஒன்றின்பின்னர் காட்டிலிருந்து திரும்பிய முன்னிரவில் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கினார்.

அவரது கால் முழங்காலுக்கு கீழே கழற்றப்பட்டது. இதுபற்றி அவர் குறிப்பிட்ட போது; "நான் ஒரு துரதிர்ஷ்டசாலி" என்று வருந்தினார்.

கண்ணிவெடிகளை கண்டுபிடிக்கும் கருவிகள்கூடப் பயனற்றவையாகிவிட்டன என்று தளபதி கரோச் என்பவர் கூறினார்.

கெரில்லாக்கள் இப்போது லோகத்தாலான சுவிட்சுகளை கைவிட்டு, மரத்தாலானவற்றையே பாவிக்கின்றனர்.

வெடிபொருட்கள் இப்போது மரங்களிலும் தொங்கத் தொடங்கியுள்ளன.

தளபதி கரோச் மேலும் தெரிவிக்கையில்; "கெரில்லாக்கள் பாவிக்கும் ஆயுதங்களோடு ஒப்பிடும்போது நாம் பாவிக்கும் ஆயுதங்கள் மிகப் பின் தங்கியவை" என்றும் குறிப்பிட்டார்.

மற்றொரு இந்திய இராணுவ உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில்; "இலங்கையில் ஒவ்வொரு குழுவும், ஒன்றையொன்று அழிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. இது தவிர்க்க முடியாதது. இதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது" என்று கூறினார்.

மேற்கண்டவாறு அக் கட்டுரை தெரிவித்திருந்தது.


### கிட்டு கொழும்பில்

வன்னியில் மணலாற்றுக் காட்டுப்பகுதியில் தங்கியிருந்த கிட்டுவை கால் சிகிச்சைக்காகவும், வெளிநாடுகளில் புலிகள் இயக்க வேலைகளைக் கவனிப்பதற்காகவும் பிரிட்டனுக்கு அனுப்ப முடிவு செய்தார் பிரபாகரன்.

மணலாற்றுக் காட்டில் இருந்து புறப்பட முன்னர் கிட்டுவின் மனம் எப்படியிருந்தது என்று பொட்டம்மான் நினைவு கூர்ந்திருந்தார்.

"கிட்டண்ணை இறுதியாக நாட்டைவிட்டுப் புறப்படும் காலத்தில் மிகவும் நொந்து போயிருந்தார். இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட தன்னையும் சக போராளிகளையும் விடுவிக்கும்படி சிறையில் உண்ணா விரதம் இருந்ததும், அதனைத் தொடர்ந்து யாழ் நகரில் விடுவிக்கப்பட்டதும், அதன் பின்னர் அவர் மணலாற்றுக் காட்டுக்குச் சென்று தலைவருடன் இணைந்து கொண்டதும் தெரிந்ததுதான்.

இந்தியர்கள் தன்னை மட்டும் விடுவித்துவிட்டு, தன் தோழர்களை சிறையில் வைத்திருப்பதை சொல்லி வெதும்புவார். "என்ரை கோஷ்டி எல்லாத்தையும் என்னட்டை இருந்து பிரிச்சுப் போட்டாங்கள் மச்சான்" என்று கூறுவார்.



வெளிநாட்டில் கிட்டு

## கிட்டுவின் இலண்டன் பயணம்

கிட்டண்ணை சர்வதேச தொடர்பாளராக நாட்டைவிட்டு புறப்படுவது என்பது முடிவு செய்யப்பட்டுவிட்டது.

எந்த வேலையாக இருந்தாலும் பொறுப்பேற்க வேண்டும் என்று அவரது வழமையான நடைமுறைக்கு சோதனையாக வந்தது இம் முடிவு.

நான் அப்போது யாழ் மாவட்ட நிர்வாகத்தை பானுவிடம் ஒப்படைப்பதற்காக யாழ்ப்பாணம் புறப்பட இருந்தேன். எம்மிடையே நீண்ட பிரிவு வரப்போகிறது என்பது தெரிகிறது.

சிறிய வட்டக் கொட்டிலில் வைத்து கதைக்கத் தொடங்கினார். இயக்கத்தில் ஒவ்வொருவரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி, தலைவரின் எண்ணங்களுக்கு நாம் எப்படி செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்பது பற்றி, கூறினார். "எமது போராட்டத்திற்காக என்ன வேலை ஒப்படைக்கப்பட்டாலும் அதில் தீவிரமாக ஈடுபட வேண்டும். எமது கடமையை மேலும் சிறப்பாகச் செய்ய வேண்டும். எனக்கு என்ன வேலை கொடுத்தாலும் செய்வேன். பெடியளின் உடுப்பை தோய்த்து மடிக்கும் வேலை எண்டாலும், அதை எப்படி வெள்ளையாய் தோய்ப்பது என்று தான் ஆராய்ச்சி செய்வேன். எனக்கு இது பிரச்சனை இல்லை" என்று கூறினார்.



பொட்டம்மான் கிட்டுவின் மறைவின் பின்னர் நினைவு கூர்ந்த சம்பவங்களுள் ஒன்றுதான் மேற்கண்ட கூற்றாகும்.

கொழும்பில் கடவுச் சீட்டுக்கு கிட்டு விண்ணப்பம் செய்தார். கிட்டுவுக்காக கடவுச் சீட்டுக்கு பொன்சர் செய்தவர் இராணுவ அதிகாரி கொத்தலாவல.

கிட்டு யாழ்மாவட்ட தளபதியாக இருந்தபோது நடைபெற்ற கைதிகள் பரிமாற்றத்தின்போது கிட்டுவின் நண்பரானவர் கொத்தலாவல.

கால் சிகிச்சைக்காக செல்வதற்கு என்றே பிரிட்டிஷ் விசாவும் பெறப்பட்டது.

கால் சிகிச்சை என்பது முழுக் காரணமல்ல. இலங்கை அரசுடன் போர் தொடங்குவது உறுதி என்பதை உணர்ந்திருந்த பிரபாகரன், சர்வதேச அளவில் நிதி திரட்டல் மற்றும் பிரசார நடவடிக்கைகளின் தேவை கருதியே கிட்டுவை வெளிநாட்டுக்கு அனுப்ப முடிவு செய்திருந்தார்.

கிட்டு பிரிட்டனுக்கு சென்ற பின்னர் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளது செயற்பாடுகள் புதியவேகம் பெறத்தொடங்கின.

அதே சமயம் இலண்டனில் இருந்த கிட்டுவுடன் நட்பு வைத்திருக்க 'றோ' உளவுப் பிரிவும் விரும்பியது.

புலிகளுடன் போர் நடந்தாலும், புலிகளுடன் பேச்சு நடத்தக் கூடிய, தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு உறவை வைத்திருக்கவே 'றோ' விரும்பியது.

கிட்டுவும் 'றோ'வுடன் தந்திரோபாய உறவை வைத்திருந்தார். அத் தகவலை தலைமைப் பீடத்திற்கும் அவ்வப்போது தெரிவித்தார்.

கிட்டு இலண்டன் சென்றபின்னர் அங்கிருந்து மாதம் இருமுறையாக 'களத்தில்' என்னும் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது.

ஃபிரான்சில் இருந்து 'எரிமலை' என்னும் சஞ்சிகை வெளிவந்தது. கனடாவில் இருந்து மாதம் இருமுறை வெளியாகும் 'உலகத் தமிழர்', நோர்வேயில் இருந்து வருடத்திற்கு மூன்றுமுறை வெளியாகும் 'சுதந்திர தாகம்' என்னும் சஞ்சிகையும் புதிய மெருகுடன் வெளிவரத் தொடங்கின.

கிட்டு இராணுவரீதியான செயற்பாடுகளில் மட்டுமன்றி, பத்திரிகைத் துறை விடயங்களிலும் திறமையானவர்தான்.

தமிழ்நாட்டில் சிறையில் இருந்த போது 'தேவி' வார இதழில் கிட்டு தொடர்ச்சியாக தன் அனுபவங்களை எழுதி வந்தார்.

பிரஞ்சு, டொச்சு, டேனிஷ், நோர்வேஜியன் ஆகிய மொழிகளிலும் சஞ்சிகைகள் வெளியாகின.

ஓவியக் கண்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் போன்றவற்றையும் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் மூலமாக நடத்தினார். கருத்தரங்குகளில் உரையாற்றினார்.

இயக்கங்களில் இருப்பவர்களுக்கு ஆயுதங்களைத் தூக்குவதைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. அரசியல் கதைக்க மெத்தப் படித்த மேதாவிகள்தான் இலாய்க்கு என்று சிலர் கருதுவதுண்டு,

சில இயக்கங்களின் தலைவர்கள்கூட தங்கள் உறுப்பினர்கள் எடுபிடி வேலைக்கும், ஆயுதம் தூக்கிக் கொண்டு நிற்கவுமே இலாய்க்கு என்று கருதி, இயக்கங்களுக்கு அப்பாற்பட்ட ஆட்களை அந்த உறுப்பினர்களின் தோளில் ஏறி சவாரி செய்ய அனுமதித்ததும் உண்டு.

ஆனால், புலிகள் இயக்கத்தில் எந்த வேலையையும் எவரும் செய்யக்கூடிய நிலைக்கு தம் உறுப்பினர்களை பயிற்றுவிக்கும் முறை இருக்கிறது. அதனால் தான் உறுப்பினர்களும் தலைமைக்கு விசுவாசமாக இருக்கிறார்கள்.

கிட்டு ஒன்றும் படித்த மேதாவியல்ல. ஆனால், வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலரை சந்தித்து கிட்டு மேற்கொண்ட பிரசாரங்களுக்கும் சுறுசுறுப்புக்கும் நிகராக வேறெந்த மேதாவிகளும் ஈடு கொடுக்கவும் முடியாது.

(தொடர்ந்து வரும்)





## கிளிநொச்சி சமர்

கிளிநொச்சி சமரின் பின்னர் புலிகளின் அணிகள் கிளிநொச்சி நகரில் நிலைகொண்ட காப்பரண்கள். படையினரால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலிகளுடன் கூடிய காவலரண் பகுதிகளிலும் புலிகளின் அணிகள் காணப்படுகின்றன. கிளிநொச்சி சமர் தளபதி ஜெயம் தலைமையில் மேற்கொள்ளப்பட்டதாக புலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்